| பண்ணை இயந்திரத்தின் பெயர் | கருவியினை பயன்படுத்த தேவைப்படும் ஆட்களின் எண்ணிக்கை | சாதாரண முறையில் தேவைப்படும் ஆட்களின் எண்ணிக்கை | திறன் | சேமிக்கும் சாகுபடி செலவு (ஏக்கருக்கு) |
|---|---|---|---|---|
| நாற்று விடும் கருவி | 2 ஆண்கள் + 1 பெண் | 1 ஆண் | ஒரு மணி நேரத்தில் 6 ஏக்கருக்கு தேவையான நாற்று தட்டுக்களை தயார் செய்ய முடியும் | ரூ.600 |
| நெல் நடவு செய்யும் கருவி | 2 ஆண்கள் +3பெண்கள் | 20 முதல் 25 பெண்கள் | ஒரு நாளைக்கு 3 முதல் 8 ஏக்கர் வரை நடவு செய்ய முடியும் | ரூ.1500 |
| களையெடுக்கும் கருவி | 2 ஆண் | 10 முதல் 15 பெண்கள் | ஒரு நாளைக்கு 0.5 முதல் 1 ஏக்கர் வரை களையெடுக்கலாம் | ரூ.1000 |
| அறுவடை செய்யும் கருவி | 1 ஆண் | 2 ஆண்கள் + 15 பெண்கள் | ஒரு நாளைக்கு 8 முதல் 10 ஏக்கர் வரை அறுவடை செய்ய முடியும் | ரூ.2500 |

இத்தகைய பண்ணை இயந்திரங்களை விவசாயிகள் வாங்குவதற்கு வேளாண் பொறியியல் துறை மான்யமும், அனைத்து வங்கிகளும் கடனுதவியும் வழங்குகின்றன. மேலும் இத்தகைய இயந்திரங்களை இயக்கவும், பராமரிக்கவும் வேளாண் அறிவியல் மையமானது தகுந்த பயிற்சிகள் அளிக்கின்றது. மேலும் விவசாயிகளின் நிலங்களில் முதன்மை செயல்விளக்க திடல்கள் அமைத்து, அதன் வாயிலாக விவசாயிகளுக்கு செயல்முறைவிளக்கங்கள் மற்றும் பராமரிப்பு முறைகளை தெளிவாக செய்து காண்பிக்கின்றனர். எனவே, விவசாய பெருமக்கள் தங்கள் விவசாயத் தொழிலில் புதிய தொழில் நுட்பங்களை கடைபிடித்து, அதன் மூலம் அதிக மகசூல் பெற்று, வாழ்வாதாரத்தை பெருக்கி கொள்ளலாம்.

**S. முகமது இஸ்மாயில்,** B.E., (Agri.)
திட்ட உதவியாளர் (வேளாண் பொறியியல்)

மற்றும்

முனைவர். **T. சுந்தர்ராஜ்,** M.Sc., (Agri.) Ph.D.,
திட்ட ஒருங்கிணைப்பாளர்,
டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையம்,
எலுமிச்சங்கிரி, கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 120.
இணையதளம் : www.krishnagirikvk.org



# நெல் சாகுபடியில் பண்ணை இயந்திரங்களின் பயன்பாடு

இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் சுமார் 72 சதவீதம் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். அவர்களில் 60 சதவீத மக்கள் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் செய்கின்றனர். நமது நாட்டில் பயிரிடப்படுகின்ற தானியப்பயிர்களில் முதன்மையும் முக்கியமானதும் நெல் பயிராகும். நெல்லானது 43.1 மி.எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு 128.44 மி.டன்கள் உற்பத்தி செய்து உலகளவு உற்பத்தியில் நமது நாடு இரண்டாம் இடத்தில் இருந்தாலும் உற்பத்தித் திறனில் (2 டன்/எக்டர்) மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றோம்.

நமது நாட்டின் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப வரும் 2020ஆம் ஆண்டில் சுமார் 200 மி.டன்கள் நெல் தேவைப்படும் என பொருளாதார வல்லுனர்கள் கணித்துள்ளனர். எனவே, தேவைகளை ஈடுகட்டும் வகையில் பல்வேறு ஆராய்ச்சிகளின் மூலம் பூச்சிகள், நோய்கள் மற்றும் வறட்சியினை தாங்கி வளர்ந்து, அதிக மகசூல் தரக்கூடிய பல புதிய ரகங்களை ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர். மேலும் சீரற்ற பருவமழை, மாறிவரும் தட்பவெப்ப சூழ்நிலை மற்றும் தகுந்த வேலையாட்கள் விவசாய வேலைகளுக்கு தக்க தருணத்தில் கிடைக்காமை போன்ற பல்வேறு காரணங்களினால் மகசூல் இழப்பு அதிகமாகின்றது. இதன் காரணமாக உற்பத்தி திறன், மேலும் குறைகின்றது.

தற்சமயம் மாறிவரும் பொருளாதார சூழல் காரணமாக கிராமப்புறமக்கள் அதிக வருமானத்திற்காக புதிய வேலைவாய்ப்பினை தேடி நகர்ப்புறங்களுக்கு இடம் பெயர்கின்றனர். இதன் காரணமாக விவசாய வேலைகளுக்கு கடும் ஆட்பற்றாக்குறை ஏற்படுகின்றது. பொதுவாக நெற்பயிர் சாகுபடிக்கு வேலையாட்களின் தேவை மிகவும் அதிகம். உழவு செய்தல், நாற்று விடுதல், நாற்று நடுதல், களையெடுத்தல், அறுவடை மற்றும் கதிரடித்தல் போன்றவேலைகளுக்கு அதிகளவில் ஆட்கள் தேவைப்படுகின்றனர். ஆட்பற்றாக்குறையின் காரணமாக சரியான நேரத்தில் இவ்வேலைகளை மேற்கொள்ளாவிட்டால் மகசூல் இழப்பு மேலும் அதிகரிக்கின்றது.

எனவே, நெல் சாகுபடியில் குறைவான உற்பத்தி திறன், வேலையாட்களின் பற்றாக்குறை மற்றும் அதிகரித்து வரும் சாகுபடி செலவு போன்றவற்றை சமாளிக்க பண்ணை இயந்திரங்களை பயன்படுத்துவதே, ஒரே தீர்வாகும். அவ்வாறு நெல் சாகுபடியில் வேலையாட்கள் தேவையினை குறைக்கவும், விவசாயிகளுக்கு அதிகளவில் பயன்தரக்கூடிய, உபயோகமான பண்ணை இயந்திரங்களைப்பற்றி நாம் இங்கு காணலாம்.

## உழவு செய்தல்:

பொதுவாக நிலத்தினை உழவு செய்வதற்கு உழவர்கள் ஏர் மற்றும் கலப்பையினை பயன்படுத்துவார்கள். தற்சமயம் நேரம், ஆட்கள் மற்றும் கால்நடைகளின் பற்றாக்குறையினால் பவர்டில்லர் மற்றும் டிராக்டரினை விவசாயிகள் உழவுக்கு பயன்படுத்தி வருகிறார்கள். இதில் அதிக எடையுள்ள டிராக்டரினை கொண்டு தொடர்ந்து உழவு மற்றும் பிறபணிகளில் ஈடுபடும் பொழுது நிலத்திலுள்ள (Sub-soil எனப்படும்) கீழ்மண்ணானது இறுகிக்கொண்டே இருக்கும். சில வருடங்களுக்கு பிறகு இதுவே மகசூல் குறைவிற்கும், நீரின் தேவை அதிகரிப்புக்கும் காரணமாகின்றது. இதனை நிவர்த்தி செய்வதற்கு பவர்டில்லரினை பயன்படுத்தலாம் அல்லது தற்சமயம் சந்தையிலுள்ள எடைகுறைவான Four Wheel Drive இல் இயங்கக்கூடிய சிறிய ரக டிராக்டரி (Mini tractor) னை விவசாயிகள் பயன்படுத்தலாம். இதனுடன் இணைக்கப்பட்ட ரோட்டவேட்டரினை பயன்படுத்தி நன்கு பண்படுத்தப்பட்ட சேடை உழவினை பெறமுடியும். நாற்றாங்கல், வயல் மற்றும் நடவு வயலினை இந்த டிராக்டரினை பயன்படுத்தி, உழவு செய்தல், சேடை ஓட்டுதல், பரம்படித்தல் மற்றும் மட்டப்படுத்துதல் போன்ற வேலையினை மிக எளிதாக செய்யமுடியும்.







## நாற்றாங்கால் தயாரிப்பு:

வழக்கமான முறையில் நாற்று விட்டு பின் நடவு செய்வதற்கு அதிக அளவில் ஆட்கள் தேவைப்படுகிறார்கள். ஒரு எக்டர் நடவு செய்யும் வேலைக்கு மட்டும் சுமார் 280-350 மனிதவேலை நேரம் தேவைப்படுகிறது. மொத்த சாகுபடிக்கு தேவைப்படும் நேரத்தில் இது 25 சதவீதமாகும். பருவமழை தொடக்கத்தில் அல்லது அணைகளில் பாசனநீர் திறக்கும் பொழுது அனைத்து விவசாயிகளும் ஒரே சமயத்தில் உழவுப் பணிகளை தொடங்கும் பொழுது வேலையாட்கள் பற்றாக்குறை ஏற்படுகிறது. எனவே நெல் நாற்றினை நடவு செய்வதற்கு நாம் இயந்திரங்களை பயன்படுத்தலாம். இதற்கு பாய் நாற்றாங்கால் தயார் செய்ய வேண்டும்.




இம்முறையில் ஏக்கருக்கு 8-10 கிலோ விதை போதுமானது. தற்சமயம் பாய் நாற்றாங்காலானது பிளாஸ்டிக் தட்டுகளில் வளர்க்கப்படுகின்றன. விவசாயிகள் பயன்படுத்தும் நாற்றுநடும் இயந்திரத்தின் அளவினை பொறுத்து செவ்வக வடிவிலான இந்த பிளாஸ்டிக் தட்டுக்களின் அளவு மற்றும் தேவைப்படும் எண்ணிக்கைகள் மாறுபடும். இந்த பிளாஸ்டிக் தட்டுக்களினை நன்கு சேடை ஓட்டிய மண்ணில் மேல் வைத்து, சேற்றினை அதன் மேல் சமமாக பரப்பி பின்பு முளைவிட்ட நெல் விதையினை அதன் மேல் சீராக தூவவேண்டும். அதன்பின் விதைகளை, வைக்கோல் கொண்டு சீராக மூடிவிடவேண்டும். வெயிலில் விதைகள் காய்ந்து விடக்கூடாது. மண்ணில் சிறுசிறு கற்கள் இல்லாமல் இருக்கவேண்டும். தினமும் வைக்கோல் மேல், பூவாளியினை கொண்டு இரண்டு முறை நீர் தெளிக்கவேண்டும். பிளாஸ்டிக் டிரேக்களில் நாற்றுக்கள் வளர்க்கப்படுவதால் மண்ணின் ஈரப்பதம் குறையாமல் பாதுகாக்க வேண்டும். 4 அல்லது 5 வது நாளில் வைக்கோலை எடுத்துவிட வேண்டும். நாற்றுகள் சுமார் 2 செமீ உயரம் வளர்ந்திருக்கும். அதன்பின் தினமும் வழக்கம் போல் (மண் காயாமல்) நீர் பாய்ச்ச வேண்டும். 18 முதல் 20 நாட்கள் வளர்ந்த நாற்றானது சுமார் 15 செமீ உயரம் வளர்ந்து இருக்கும், இந்த நாற்றானது நடவு செய்ய ஏதுவானது ஆகும். ஒரு ஏக்கருக்கு சுமார் 80 முதல் 100 டிரேக்கள் தேவைப்படுகின்றன.





## நடவு செய்தல்:


நாற்றின் வயது 17 நாட்கள் ஆகும் பொழுதே நடவு வயலானது மட்டப்படுத்தி, நடவு செய்வதற்கு தயார்நிலையில் இருக்கவேண்டும். நடவு செய்யும் வரை நடவுவயலின் மேற்பரப்பு நீரின்றி காயாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தற்சமயம் நடவு செய்வதற்கு பல்வேறு வகையான நடவு இயந்திரங்கள் கிடைக்கின்றன. விவசாயிகள் தங்கள் தேவைக்கு ஏற்ப இந்த இயந்திரத்தினை தேர்வு செய்துகொள்ளலாம்.



**Walk behind Rice transplanter:** இந்த இயந்திரம் 3 முதல் 5 குதிரைத்திறனுடன் 4 வரிசையில், நாற்றுக்களை வரிசைக்கு வரிசை 30 செமீ இடைவெளியில் நடவு செய்யும். பயிருக்கு பயிர் இடைவெளியினை 12-21 செமீ வரை மாற்றிக்கொள்ளலாம். ஒரு நாளைக்கு 1 முதல் 2 ஏக்கர் வரை 2 வேலையாட்களை கொண்டு நடவு செய்ய முடியும். இதன் எடை 160 கிலோ ஆகும்.



**6 Row Rice transplanter:** இந்த இயந்திரத்தினை இயக்குபவர் அமர்ந்தபடியே இயக்கி ஒரே சமயத்தில் 6 வரிசையில், நாற்றுக்களை வரிசைக்கு வரிசை 30 செமீ இடைவெளியில் நடவு செய்யும். பயிருக்கு பயிர் இடைவெளியினை 12 முதல் 21 செமீ வரை மாற்றிக்கொள்ளலாம். ஒரு நாளைக்கு 6 முதல் 8 ஏக்கர் வரை 4 வேலையாட்களை கொண்டு நடவு செய்ய முடியும். இதன் எடை 590 கிலோ ஆகும்.





**8 row Rice transplanter:** 4 குதிரைத்திறன் கொண்ட இந்த இயந்திரமானது 8 வரிசையில் நாற்றுக்களை நடவு செய்யும் நாற்றுக்களை வரிசைக்கு வரிசை 23.5 செமீ இடைவெளியில் நடவு செய்யும். பயிருக்கு பயிர் இடைவெளி 19 அல்லது 21 செமீ என மாற்றிக்கொள்ளலாம். மண்ணில் லேசான திண்டு போன்று அமைத்து அதில் நாற்றுக்களை நடவு செய்யும். ஒரு நாளைக்கு 2 முதல் 3 ஏக்கர் வரை 3 வேலையாட்களை கொண்டு நடவு செய்ய முடியும். இயந்திரத்தினை இயக்க ஒருவரும், நாற்றுக்களை எடுத்துத்தர 2 பெண்கள் இருந்தால் போதுமானது. இதன் எடை 350 கிலோ ஆகும். இதன் இயக்கம் மற்றும் பராமரிப்பு மிகவும் எளிது.






**8 Row Rice transplanter:** இந்த இயந்திரத்தின் மூலம் ஒரே சமயத்தில் 8 வரிசையில், நாற்றுக்களை வரிசைக்கு வரிசை 30 செமீ இடைவெளியில் நடவு செய்யும். பயிருக்கு பயிர் இடைவெளியினை 13-21 செமீ வரை மாற்றிக்கொள்ளலாம். ஒரு நாளைக்கு 6 முதல் 8 ஏக்கர் வரை 4 வேலையாட்களை கொண்டு நடவு செய்ய முடியும். இதன் எடை 810 கிலோ ஆகும்.

மேற்கூறிய அனைத்து நாற்று நடவு செய்யும் இயந்திரங்களை கொண்டு நாற்று நடும் பொழுது வரிசை மற்றும் பயிருக்கு பயிர் இடைவெளியினை ஒரேமாதிரியாக பராமரிக்க முடியும். மேலும் நாற்றுக்களை அனைத்துவிதமான மண்ணிலும் ஒரே சீரான ஆழத்தில் (2 மிமீ முதல் 5 செமீ) நடக்கூடியது. ஒரு குத்துக்கு 3 நாற்றுக்கள் முதல் விவசாயிகளின் தேவைக்கேற்ப நாற்றுக்களின் எண்ணிக்கையினை மாற்றி அமைத்துக்கொள்ளலாம். பெட்ரோல் அல்லது டீசலினை கொண்டு இயங்கக்கூடிய இந்த இயந்திரங்கள் ஒரு மணி நேரத்திற்க்கு 0.5 லிட்டர் முதல் 3 லிட்டர் வரையே செலவு செய்யும். மிகக்குறைந்த வேலையாட்களைக் கொண்டு அதிக பரப்பு நிலத்தினை விவசாயிகள் நடவு செய்ய முடியும். இந்த இயந்திரங்களானது மிகக்குறைந்த எடையுடன் உள்ளதால் ஒரு நிலத்திலிருந்து மற்ற நிலங்களுக்கு எளிதில் எடுத்துச்செல்ல முடியும். இதனை பெண்களும் எளிதில் இயக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## களை எடுத்தல்:

நெல் சாகுபடியில் நடவுக்கு அடுத்தப்படியாக அதிக அளவில் வேலையாட்கள் தேவைப்படுவது களையெடுத்தலுக்குத்தான். களையின் தன்மையினை பொறுத்து ஒரு ஏக்கருக்கு 10 முதல் 20 பெண்கள் தேவைப்படுகிறார்கள். ஒரே சமயத்தில் அனைவரும் கிடைப்பதில்லை. அதனால் பொருளாதார இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆனால், இயந்திரங்களை கொண்டு நடவு செய்யும் பொழுது வரிசைக்கு வரிசை ஒரே அளவிலான இடைவெளி பராமரிக்கப்படுகிறது. எனவே களையெடுத்தல் மிக எளிமையாகவும் விரைவாகவும் செய்யமுடியும். மனித ஆற்றலினால் இயங்கக்கூடிய கோனோ வீடர் அல்லது பெட்ரோலினால் இயங்கக்கூடிய பவர்வீடரினை நாம் பயன்படுத்தலாம்.

**Cono weeder:** கோனோ வீடரானது மிகக்குறைந்த எடையுடன், அனைவரும் எளிதில் இயக்கும் படி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு 0.5-0.75 ஏக்கர் வரை 1 வேலையாளை கொண்டு களையெடுக்கமுடியும். விலையும் மிகக் குறைவாகும்.






**Power weeder:** பவர் வீடரானது 1.75 குதிரைத்திறனுடன் பெட்ரோலால் இயங்கக்கூடியது. இது ஒரே சமயத்தில் 2 வரிசையில் களையெடுக்கக்கூடியது. இதன் எடை 17 கிலோ ஆகும். அனைவரும் எளிதில் இயக்கும் படி வடிவமைக்கப் பட்டுள்ளது. ஒரு வேலையாளை கொண்டு ஒரு நாளைக்கு 2 ஏக்கர் வரை களையெடுக்கமுடியும்.

இந்த களையெடுக்கும் இயந்திரங்களை கொண்டு நாம் களையெடுக்கும் பொழுது வேலையாட்களின் தேவை மற்றும் செலவும் குறைகின்றது. மேலும் காலவிரயம் தவிர்க்கப்படுகிறது. களையெடுத்தப்பின் பயிர்களில் உள்ள பக்கவாட்டு பழைய வேர்கள் அறுபட்டு புதிய வேர்கள் தோன்றி மண்ணிலுள்ள சத்துக்களை நன்கு உறிஞ்சி செழிப்பாக வளர உதவுகிறது. இதனால் அதிக தூர்கள் பிடித்து விளைச்சல் அதிகரித்து உற்பத்தித் திறன் உயரும். ஆனால் இக்களையெடுக்கும் இயந்திரம் பயன்படுத்தபட வேண்டுமானால், பயிர்கள் வரிசையில் போதிய இடைவெளியில் நடவு செய்திருக்கவேண்டும்.

## அறுவடை:

நன்கு விளைந்தப்பின் தகுந்த தருணத்தில் அறுவடை செய்துவிட வேண்டும். மழை அல்லது அறுவடைக்கு ஆட்கள் கிடைக்காத காரணங்களினால் அறுவடை தாமதமாகக்கூடும். அந்த சமயத்தில் அதிக அளவில் பொருளாதார இழப்பு ஏற்படும். எனவே பொருளாதார இழப்பினை தவிர்க்கவும், தக்க சமயத்தில் அறுவடை செய்யவும் சாகுபடி செலவினை குறைக்கவும் விவசாயிகள் தங்கள் நிலத்தின் தன்மைக்கு ஏற்றாற்போலும் பொருளாதார வசதிக்கு தகுந்தபடி, பொருத்தமான அறுவடை இயந்திரங்களை பயன்படுத்தலாம்.



**Reaper:** குறைந்த நிலப்பரப்பு மற்றும் சிறிய முதலீடு கொண்ட விவசாயிகள் இந்த அறுவடை இயந்திரத்தினை பயன்படுத்தலாம். சேறு அதிகமுள்ள, பதியக்கூடிய நிலங்களில் இந்த அறுவடை இயந்திரமானது சுலபமாக இயங்கும். ஒரு ஏக்கரினை 1.5 - 2 மணி நேரத்தில் அறுவடை செய்துவிடும். அறுவடை செய்தபின் கதிரடிக்கும் இயந்திரத்தின் மூலம் நெல்லினை தனியே பிரிக்கவேண்டும்.

கதிர் முற்றி நன்கு காயும் முன், இந்த இயந்திரம் கொண்டு ஓரிரு நாட்களுக்கு முன்பாக நாம் அறுவடை செய்யும் பொழுது, நெல் மணிகள் கீழே விழுந்து வீணாவது தவிர்க்கப்படுகிறது. விலையும் மிக குறைவு. அனைவரும் இதனை எளிதாக இயக்கமுடியும்.





**Combined Harvester:** டிராக்டர் இணைக்கப்பட்ட கூட்டு அறுவடை இயந்திரத்தினை கொண்டு ஒரு ஏக்கரினை 1 மணி நேரத்தில் அறுவடை செய்துவிட முடியும். நெல் தனியாகவும் வைக்கோல் தனியாகவும் பிரித்துவிடும். அறுவடை செய்யக்கூடிய நிலமானது ஈரப்பதமற்றதாக இருக்கவேண்டும். இயந்திரத்தின் எடையினால் மண்ணில் பதியக்கூடும்.



**Minicombined Harvester:** தற்சமயம் சந்தைகளில் குறைவான எடையுள்ள சிறிய ரக கூட்டு அறுவடை இயந்திரம் பலரகங்களில் உள்ளது. இந்த இயந்திரங்களை கொண்டு 1 மணி நேரத்தில் ஒரு ஏக்கரினை அறுவடை செய்துவிட முடியும்.

பயிரானது மழை அல்லது காற்றால் சாய்ந்துவிட்டாலும் இந்த ரக அறுவடை இயந்திரமானது அறுவடை செய்துவிடும். இஞ்சின் சக்தி, அறுவடை செய்யும் திறன் மற்றும் தானியகிடங்கு கொள்ளளவு பொறுத்து பல்வேறு வகையான அறுவடை இயந்திரங்கள் உள்ளன. விவசாயிகள் தங்கள் தேவைக்கேற்ப தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். இத்தகைய இயந்திரங்களை இயக்க பரந்த, பெரிய வயல்கள் இருக்க வேண்டும் என அவசியம் இல்லை. இயந்திரத்தின் எடையும் குறைவாக இருப்பதால் பதியகூடிய நிலங்கள் மற்றும் சிறிய நிலப்பரப்பு உடையவர்களும் இந்த இயந்திரங்களை சுலபமாக பயன்படுத்தலாம்.

மிககுறைவான நிலப்பரப்புடைய விவசாயிகள் இத்தகைய இயந்திரங்களை வாங்குவதற்கு பொருளாதார வசதியில்லை எனில் கிராமத்தில் உள்ள 20 முன்னோடி விவசாயிகள் ஒன்றாக இணைந்து விவசாய குழுக்களை ஆரம்பித்து, அதன் மூலம் மிகக்குறைந்த முதலீடு செய்து இத்தகைய இயந்திரங்களை வாங்கலாம். குழுவின் பெயரிலேயே வங்கிகளில் கடனுதவி அல்லது இயந்திரங்களை வாங்கி பயன்படுத்தலாம். தங்கள் குழுக்களில் உள்ள விவசாயிகளுக்கு பயன்படுத்திய பின் கிராமத்திலுள்ள மற்ற விவசாயிகளுக்கு வாடகைக்கு விட்டும் வருவாய் ஈட்டலாம்.

இனிவரும் காலங்களில் ஆட்கள் பற்றாக்குறை, அதிக சாகுபடி செலவு மற்றும் குறைந்த உற்பத்தி திறன் போன்ற பிரச்சினைகளை தீர்க்க பண்ணை இயந்திரங்களின் பயன்பாட்டே சிறந்த வழியாகும். விவசாயிகளும் தங்கள் விவசாய தொழிலினை ஒரு லாபம் ஈட்டும் வியாபார நோக்கத்துடன் செய்யவேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது தான் செலவினை குறைத்து அதிக லாபம் ஈட்டமுடியும்.